[1992 மார்ச் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 200, திரு, டி, சுதர்சனம். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்,

200—

சமையல் தொழிலாளர்களுக்கு விபத்து உதவித்தொகை.

*2896—திரு, டி. சுதர்சனம்:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கற்பட்டு-எம், ஜி, ஆர், மாவட்ட சமையல் தொழிலாளர் சங்கம் சமையல் தொழிலாளர்களுக்கும் விபத்து உதவித் தொகை வழங்க வேண்டும் என திர்மானம் ஒன்றை ஜூலை மாதம் அரசுக்கு அனுப்பியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு, எஸ்.டி. சோமசுந்தரம்:

(அ) ஆம்,

(ஆ) கல்யாணம் மற்றும் விசேஷ காலங்களில் சமையல் செய்யும் ஏழை சமையல் கலைஞர்கள் விபத்துக்கு ஆளாக்கப்பட்டால் அவர்களுக்கு நிதி வழங்கப்படும்,

திரு, டி, சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கால கட்டங்களில் இது போன்ற விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. கல்யாண காலங்களிலே மட்டும் விபத்து ஏற்பட்டால் நிதி உதவி அளிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்து மீண்டும் ஒரு கேள்வி. கல்யாண காலங்கள் அல்லாத காலங்களிலும் இந்தச் சமையல் தொழிலாளர்களுக்கு விபத்து ஏற்பட்டால், இந்த நஷ்ட ஈட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சமையல் செய்கிற கலைஞர்கள் இந்தந்த நேரத்திலேதான் அந்த வேலையைச் செய்ய வேண்டும் என்ற வரைமுறை இல்லை, அவர்கள் அந்த வேலையைச் செய்தாலும் சரி. விசேஷ காலங்கள் எந்த நேரமாக இருந்தாலும் சரி அல்லது எந்த மாதமாக எல்லா

1992 மார்ச் 13]

மாதங்களிலும் 12 மாதங்களிலும் நல்ல நாள் கெட்ட நாள் எந்தச் சமயத்திலும் விபத்துக்கு உள்ளானால் அவர்களுக்கு எல்லாம் விதிமுறைப்படி நிவாரணப் பணம் வழங்கப்படும்,

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விபத்து நிவாரண தொகையை இவ்வளவு தொகை என்று நிர்ணயிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிர் இழந்தால் அல்லது— இரண்டு கை பயன்படாமல் போனால் அல்லது 2 கண்ணும் பயன் படாமல் போனால், அல்லது இரண்டு கால்களும் பயன்படாமல் போனால் அவர்களுக்கு உதவித் தொகை பத்தாயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. அதிலே ஒரு கை போய், ஒரு கால் போய் அல்லது ஒரு கண் போயிருந்தாலும் அதற்கு 7 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும். ஆகவே அவர்களுக்கு ஏற்படுகிற அங்க ஹீனங்களுக்கு ஏற்றவாறு தொகைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சமையல் தொழிலைப் பொறுத்தவரை யில் இது இல்லத்தரசிகளுடைய பரம்பரை தொழில் போன்ற ஒன்றாகும். இப்போது அடிக்கடி பேப்பர்களிலே பார்க்கிற போது சமையல் செய்யும்போது ஸ்டவ் வெடித்து தீ பிடித்து மரணம் என்ற செய்தி வருகிறது. உயிரைப் பணயம் வைத்து தொழில் செய்கின்ற மீனவர்கள் இறந்து போனால் 21 ஆயிரம் ரூபாய் கொடுப்பதைப் போல, காவல் துறையினால், இது சமை யல் செய்யும்போது ஸ்டவ் வெடித்து தான் மரணம் என்று உறுதி செய்கிறபோது அந்தப் பெண்களுடைய வாரிசுகளுக்கு, 21 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலை வர்அவர்களே, சமையல் வேலையை செய்கிறவர்களுக்கு இப் போதுதான் பத்தாயிரம் ரூபாய் என்று புதிதாக சேர்க்கப்பட்டி ருக்கிறது. அதை நீடிப்பது பற்றி அரசினுடைய பரிசீலனையில் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். பன்னீர்செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, சமையல் தொழிலாளர்கள் என்பதற்கு அத் தாட்சியாக அவர்கள் ஏதாவது பதிவு செய்து கொண்டிருக்க

வேண்டுமா? அல்லது அவர்கள் சமையல் செய்பவர்கள் என்று மக்களால் குறிப்பிடப்பட்டாலே அவர்களுக்கு அந்தத் தொகை வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவு செய்ய வேண்டியதில்லை. சமையல் செய்பவர்கள் சமையல் செய்யும்போதே அவர்களைப் பற்றி தெரிந்து விடும். உயிர் உள்ளவர்கள் சொல்வார்கள் அல்லது மக்கள் சொல்வார்கள். அவர்களுக்கெல்லாம் கொடுக்கப்படும். அது மட்டுமல்ல. வாரிசு என்று சொல்கிறார்கள். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்பது போல அவர்களுடைய வாரிசுகள் திரும்பவும் சமையற்காரர்களாக வரவேண்டும் என்று இந்த அரசு நினைக்கவில்லை. ஆகையினால் வாரிசுக்கு கொடுப்பதைப் பற்றி இந்த அரசு எண்ணாததற்குக் காரணம், வாரிசுகள் மேலே வர வேண்டும், படிக்க வேண்டும், என்ஜினியர் ஆகவேண்டும், உங்களைப்போல சட்டமன்ற உறுப்பினர்களாக வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது மிகத் தெளிவாக கை போனால் இவ்வளவு, கால் போனால் இவ்வளவு என்று விவரமாகச் சொல்லியிருக்கிறார்கள். உயிரே போனால் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுவும் சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லும்போது முதலில் இறப்பு என்று சொன்னேன். இறப்பு என்றால் உயிர் போனதில் வந்துவிடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹவுஸ் வைப் — பெண்கள் வீடுகளிலே வேலை செய்து கொண்டிருக்கும்போது ஸ்டவ் வெடிக்கின்றது. உடனே ஆபத்து ஏற்பட்டு அவர்கள் இறந்து போய்விடுகிறார்கள் அல்லது கை போய்விடுகிறது அல்லது கால் போய்விடுகிறது.

1992 மார்ச் 13]

அது அரசினுடைய கவனத்திற்கு வந்தால் அவர்களுக்கு உதவி செய்வதற்கு ஏதாவது வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே கேள்வியினைத் தான் திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் கேட்டார்கள். அதற்கு அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார்.

வினா எண் 201, திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

201—

நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கிடைத்த உபரி நிலங்கள்.

*6227 திரு. ம. சின்னசாமி:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நில உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் கிடைத்த உபரி நிலங்கள் எவ்வளவு?

(ஆ) அந்த உபரி நிலங்கள் எவ்வளவு நபர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக இதுவரையிலும் 1,80,760 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த உபரி நிலங்கள் 1,19,912 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய புரட்சித் தலைவியினுடைய அரசு இருப்பவன், இல்லாதவன் என்கிற நிலைமை இருக்கக் கூடாது என்பதற்காக எல்லோரும் எல்லாம் பெற வேண்டும் என்ற கொள்கையில் தம்முடைய அரசு ஏற்பட்ட பிறகு பினாமி நில ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்களே, அது மத்திய அரசினுடைய ஒப்புதல் பெற்றிருக்கிறதா, இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.